**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No. 353/2015</u>**

**<u>நாள்.16.02.2026</u>**

**<u>வா.சா. 1</u>- சகாயராஜ்**

**<u>1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் எனக்காக மட்டும் சாட்சி சொல்கிறேனா இசக்கிமுத்துவுக்காகவும் சாட்சி சொல்கிறேனா என்றால் எனக்காக மட்டும் சாட்சி சொல்கிறேன். என் தகப்பனார் பெயர் சூசை மரியான் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோது நான், தகப்பனார், தாயார் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். சொத்துக்கள் தொடர்பாக எனக்கும், தகப்பனார், தாயாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் கிடையாது என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் மற்றும் அதனுடன் சேர்ந்த சொத்துக்கள் ஆதியில் வேலாயுதம் என்பவருக்குப் பாத்தியம் என்றால் இல்லை வேலு என்பவருக்குப் பாத்தியம் வேலு என தான் ஆவணங்களில் உள்ளது. நான் சொல்லக்கூடிய வேலுவுக்கு 3 பெண் மக்கள் என்றால் சரிதான். அதில் 1 பெண் மக்கள் பெயர் பாலி என்றால் சரிதான். மேற்படி பாலியின் குமாரத்தி தான் 1வது பிரதிவாதி பாலம்மாள் என்றால் தெரியாது. 1வது பிரதிவாதி பாலம்மாள் இந்த வழக்குச் சொத்து மற்றும் வேறு பல சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.87/1986 தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. அ.வ.எண்.87/1986 பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2015 ல். அ.வ.எண்.87/1986 பற்றி எனக்கு தெரியவந்தவுடன் அ.வ.எண்.87/1986 பற்றிய நகல்களை எடுத்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அ.வ.எண்.87/1986 வழக்கில் என்ன தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. எனது வழக்குரையில் அ.வ.எண்.87/1986 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை பற்றியும், செல்லாது எனவும் சொல்லி உள்ளேன் என்றால் சரியாகத் தெரியவில்லை.

இந்த வழக்குச் சொத்து மற்றும் வேறு பல சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.87/1986 வழக்கில் 1வது பிரதிவாதிக்கு 14.08.1986 1/3 பாகம் வழங்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் 2015 ல் மேற்படி விபரம் எனக்கு தெரியவந்தது அதனால் இந்த வழக்குப் போட்டேன். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 1981 முதல் வழக்குச் சொத்துக்கள் எங்களது அனுபவத்தில் உள்ளது அதனால் எங்களுடைய சொத்து எங்களுக்கு வேண்டும் என கேட்டுள்ளேன். அ.வ.எண்.87/1986 வழக்கில் **1**வது பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.1651/2007 ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. நீதிமன்றத்திலிருந்து ஆணையர் மூலமாக வழக்குச் சொத்துக்களை பார்வையிட வந்தார்கள் என்றால் தெரியாது. இ.ம.எண்.1651/2007 ல் இறுதிநிலை தீர்ப்பாணையில் இந்த வழக்கில் கண்ட 1வது தபசில் 2வது அயிட்ட சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 5-1/4 செண்ட் மற்றும் 2வது தபசில் சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 3-1/4 செண்ட் 1வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இ.ம.எண்.1651/2007 ல் இறுதிநிலை தீர்ப்பாணையில் ஆணையர் மூலமாக வழக்குச் சொத்துக்களை பார்வையிட வந்தார்கள் என்றால் தெரியாது. இ.ம.எண்.1651/2007 ல் இறுதிநிலை தீர்ப்பாணை உத்தரவின்படி E.P.No.27/2010 தாக்கல் செய்து 19.09.2011, 29.09.2011 ஆகிய தேதிகளில் இந்த வழக்கில் கண்ட 1வது தபசில் 2வது அயிட்ட சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 5-1/4 செண்ட் மற்றும் 2 வது தபசில் சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 3-1/4 செண்ட் 1வது பிரதிவாதிக்கு சுவாதீனம் எடுத்து கொடுக்கப்பட்டது என்றால் சுவாதீனம் எடுக்கப்படவில்லை எங்களது அனுபவத்தில் தான் சொத்து உள்ளது. மேற்படி தேதிகளில் சுவாதீனம் எடுக்க நீதிமன்ற அமீனா, சர்வேயர், காவல் துறை உதவியிடன் இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட 1வது தபசில் 2வது அயிட்ட சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 5-1/4 செண்ட் மற்றும் 2வது தபசில் சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 3-1/4 செண்ட் 1வது பிரதிவாதிக்கு சுவாதீனம் எடுத்து கொடுக்கப்பட்டு 1வது பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு அ.வ.எண்.87/1986 வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

எனது தகப்பனார் 1வது பிரதிவாதி பெயரில் 23.12.2005 ல் ஒரு கேவியட் மனு வழக்கு தபசில் சொத்துக்களுக்காக தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. 2005 ல் வழக்கு தபசில் சொத்துக்களில் டவர் அமைக்க முயற்சித்தோமா என்றால் 2003 ல் டவர் அமைக்கப்பட்டு, 2018 ல் வாடகை தராத காரணத்தால் டவர் நீக்கப்பட்டுவிட்டது. 1வது பிரதிவாதி வழக்கு தபசில் சொத்துக்களில் டவர் அமைக்கக்கூடாது என அ.,வ.எண்.213/2007 வழக்கினை எனது தகப்பனார் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. அ.,வ.எண்.213/2007 வழக்கில் 1வது பிரதிவாதி அ.வ.எண்.87/1986 வழக்கு பற்றி தெளிவாக சொல்லியிருந்தார் என்றால் தெரியாது. அ.வ.எண்.213/2007 வழக்கில் தாக்கல்செய்யப்பட்ட இம.எண்.938/2007 மனுவில் டவர் அமைக்கக்கூடாது என இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. அ.வ.எண்.213/2007 வழக்கில் டவர் நிறுவனம் எந்தவிதமான டவரும் அமைக்கவில்லை என எழுத்துப்பூர்வமான எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. அதனால் அ.வ.எண்.213/2007 வழக்கின் மூலமாக எனது தகப்பனாருக்கு 1வது பிரதிவாதி தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.87/1986 வழக்கு பற்றி நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.87/1986 வழக்கு பற்றி 2005 காலகட்டத்திலேயே எங்களுக்கு நன்கு தெரிந்திருந்தும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் எனது தந்தைக்கு படிப்பறிவு இல்லை அதனால் அவருக்கு விபரங்கள் தெரிந்திருக்காது. முன் வழக்கு விபரங்கள் தெரிந்தும், எனது தந்தை மற்றும் தாயார் 1வது பிரதிவாதியின் சொத்தை மோசடி செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வா.சா.ஆ.2 பாக விடுதலையை மோசடியாக உற்பத்தி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. முன் வழக்கு விபரங்கள் எனக்கும் எனது தந்தை மற்றும் தாயாருக்கும் 2005 லேயே தெரியும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல நாங்கள் படித்து வேலை பார்க்க வெளியூர் சென்றுவிட்டோம் அதனால் எங்களுக்கு விபரங்கள் தெரியாது. வேலுவின் பெண் மக்கள் வாய்மொழியாக செய்த பாகப்பிரிவினை பற்றி நேரடியாக எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க மாடத்திக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மாடத்தி பெயரில் சொத்துக்கள் உள்ளது என்பதற்கு பட்டா ஆவணங்களைப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் உரிமையில்லாத நபரிடமிருந்து எழுதி வாங்கப்பட்டுள்ளது அதனால் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 அடமான ஆவணங்களை பற்றி நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் நான் சொல்லிவிட்டேன். வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 அடமான ஆவணங்கள் மூலமாக எந்த உரிமையும் ஏற்படக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 09.11.2012 ல் 1வது பிரதிவாதி , 2 வது பிரதிவாதிக்கு இந்த வழக்கில் கண்ட 1வது தபசில் 2 வது அயிட்ட சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 5-1/4 செண்ட் மற்றும் 2 வது தபசில் சொத்தில் குறிப்பிட்ட அத்துமாலுக்குட்பட்ட 3-1/4 செண்ட் சொத்தினை செட்டில்மெண்டாக கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது 2015 ல் தெரியவந்தது. மேற்படி சொத்துக்களை 2 வது பிரதிவாதி, 3 வது பிரதிவாதிக்கு 02.09.2015 ல்கிரையமாக கொடுத்து, 3 வது பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல எங்கள் அனுபவத்தில் தான் சொத்து உள்ளது. நான் வழக்குரையில் சொன்னவாறு, 3 வது பிரதிவாதி அனுபவத்தில் உள்ள மேற்படி சொத்துக்களில் எந்தவிதமான டவரும் கிடையாது என்றால் சரியல்ல. நான் 1வது பிரதிவாதி தாக்கல் செய்த முன் வழக்கு விபரங்களை மறைத்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கில் எந்தவிதமான பரிகாரங்களும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.16 17:36:38 +0530